

அரசூரில் சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், அந்த பகுதியில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள காட்சி.

### கடலூரில் 20 ஆயிரம் வீடுகளை சூழ்ந்த மழைநீர்

# விழுப்புரத்தில் தீவாக மாறிய 115 கிராமங்கள்

## பாலத்துக்கு மேல் ஓடும் தண்ணீரால் சென்னை-திருச்சி போக்குவரத்து துண்டிப்பு

திருவெண்ணெய்நல்லூர், டிச.3-

தென்பெண்ணை ஆற்றில் கட்டுக்கடங்காத வெள்ளத்தால் கடலூரில் 20 ஆயிரம் வீடுகளை மழைநீர் சூழ்ந்தது. விழுப்புரம் மாவட்டத்தில் 115 கிராமங்கள் தீவாக மாறியது.

### புயல் கரையை கடந்தும் பொழியும் மழை

பெஞ்ஜல் புயல் காரணமாக தமிழகத்தின் வட கடலோர மாவட்டங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. பெஞ்ஜல் கரையை கடந்தாலும், அது தொடர்ந்து பயணிக்கும் உள்மாவட்டங்களில் பெரும் மழைப் பொழிவை கொடுப்பதுடன், கடுமையான சேதங்களையும் விளைவித்து வருகிறது.

அந்த வகையில் தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகளான கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை பகுதியில் கொட்டித் தீர்த்த கனமழையால், சாத்தனூர் அணையில் வெள்ளம் பெருக்கெடுத்தது.

இதனால் கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மற்றும் தென்பெண்ணை ஆறு சங்கமிக்கும் கடலூர் ஆகிய மாவட்டங்கள் பெரும் பாதிப்புகளை சந்தித்துள்ளது.

### மலட்டாற்றில் வெள்ளம்

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அணைக்கட்டு தென்பெண்ணை ஆற்றில் இருந்து மலட்டாறு, கோரையாறு என்று 2 கிளை ஆறுகள் பிரிந்து செல்கின்றன.

இதில், மலட்டாறு திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் உள்ள 100-க்கும் மேற்பட்ட கிராமங்கள் வழியாக கடலூர் மாவட்டம் கட்டமுத்துபாளையம் என்ற இடத்தில் மீண்டும் தென்பெண்ணையில் இணைகிறது.

இந்தநிலையில், திருக்கோவிலூர் அணைக்கட்டில் இருந்து மலட்டாற்றில் நேற்று இரவு தண்ணீர் திறக்கப்பட்டது. ஆற்றின் கொள்ளளவுக்கு மேல் வெள்ளம் கரைபுரண்டு ஓடியதால், தண்ணீர் முழுவதையும் உள்வாங்கிக் கொள்ள முடியவில்லை.

இதனால், ஆறு தனது வழித்தடத்தை தானே தீர்மானித்து கிராமங்களுக்குள் புகுந்தது. ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள 100-க்கும் மேற்பட்ட கிராமங்களை வெள்ளம் சூழ்ந்தது.

### இரவோடு இரவாக வந்த வெள்ளம்

இரவு நேரத்தில் வெள்ளம் வந்ததால், மக்கள் தங்களது உயிரை காப்பாற்றிக் கொண்டு தப்பிப்பது என்பதே பெரும் சவாலாக இருந்தது. இதனால் தங்களது உடைமைகளை வீடுகளுக்குள் போட்டுவிட்டு, உயரமான இடங்கள் மற்றும் மொட்டை மாடிகளில் தஞ்சம் அடைந்தனர்.

கட்டுக்கடங்காத வெள்ளம் பாய்வதால், படகுகளில் சென்று மீட்பது என்பது மீட்பு குழுவினருக்கு சவால் நிறைந்ததாக இருக்கிறது. இருவேல்பட்டு கிராமத்தில் மட்டும் ரப்பர் படகு மூலமாக அங்கிருந்த பொதுமக்களை மீட்பு படையினர் மீட்டனர். இதர பகுதிகளுக்கு அவர்களால் செல்ல முடியவில்லை.

அதேபோன்று, அரசூர் வராகி அம்மன் கோவிலுக்கு சாமி கும்பிட சென்ற 100-க்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் அந்த பகுதியை வெள்ளம் சூழ்ந்ததால் வெளியே வர முடியாமல் இருக்கிறார்கள்.

### தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து துண்டிப்பு

இதனிடையே சென்னை-திருச்சி மற்றும் திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே அரசூர் கூட்டுரோட்டில் மலட்டாறு பாய்ந்தோடுகிறது.

இங்குள்ள பாலத்துக்கு மேல் வெள்ளநீர் பாய்ந்தோடி, சுமார் 1½ கிலோ மீட்டர் தூர தேசிய நெடுஞ்சாலை முழுவதையும் சூழ்ந்து அருகே உள்ள கிராமங்களுக்குள் பாய்கிறது.

இதனால், நேற்று அதிகாலை 6 மணி முதல் சென்னை-திருச்சி, திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. அந்த வழியாக வந்த வாகன ஓட்டிகள் அனைவரும் மீண்டும் திரும்பி சென்றார்கள்.

இதேபோன்று, கடலூர்-திருவெண்ணெய்நல்லூர், திருக்கோவிலூர்-திருவெண்ணெய்நல்லூர் ஆகிய பகுதிக்கான போக்குவரத்தும் அரசூர் கூட்டுரோட்டில் இருந்து துண்டிக்கப்பட்டது.

### கோரையாற்றில் வெள்ளம்

மலட்டாறு ஏற்படுத்திய பாதிப்புகளை போன்று, தென்பெண்ணையின் மற்றொரு கிளை ஆறான கோரையாறு பாய்ந்தோடும் பகுதியிலும் கடுமையான பாதிப்புகள் நேர்ந்து இருக்கிறது.

மலட்டாறு, கோரையாறு ஆகிய இரு கிளை ஆறுகள் பாயும் பகுதியில் மட்டும் சுமார் 115 கிராமங்களில் உள்ள வீடுகள் மற்றும் விளை நிலங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

ஏற்கனவே விழுப்புரம் மாவட்டத்தில் கடலோரம் அமைந்துள்ள மரக்காணம் பகுதி மற்றும் திண்டிவனம், மயிலம், விழுப்புரம், விக்கிரவாண்டி பெரும் மழைப் பொழிவால் கடுமையான சேதத்துக்கு உள்ளாகி இருக்கிறது.

இதுபோன்ற சூழலில் மாவட்டத்தில் மற்றொரு பகுதியான திருவெண்ணெய்நல்லூர், அரசூர் என்று தென்பெண்ணை ஆறு பாயும் பகுதியையும் பெரும் சேதத்துக்கு உள்ளாக்கி, விழுப்புரம் மாவட்டத்தை நிலைகுலைய செய்துள்ளது பெஞ்ஜல் புயல்.

### கடலூர்

சாத்தனூர் அணையில் இருந்து வினாடிக்கு 1 லட்சத்து 70 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விட்டதாலும், பல்வேறு இடங்களில் பெய்து வரும் கனமழை காரணமாகவும் கடலூருக்கு தென்பெண்ணை ஆற்றில் நீர்வரத்து நேற்று மதியம் வினாடிக்கு 2 லட்சத்து 40 ஆயிரம் கன அடியாக இருந்தது.

இதன் காரணமாக கரையோர மக்களுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனாலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடியதால், ஊருக்குள் தண்ணீர் புகுந்தது. பல்வேறு இடங்களில் உள்ள 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது.

வெள்ளப்பெருக்கால் குண்டுசாலை, குண்டுஉப்பலவாடி, தாழங்குடா செல்லும் சாலையில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அங்கு பொதுமக்கள் செல்லாதவாறு தடுப்பு கட்டைகள் அமைத்து, போலீசார் கண்காணித்து வருகின்றனர்.

தினத்தந்தி dt : 3.12.2024.